# 6ஆம் வகுப்பு தமிழ்

## செய்யுள் : 1. மூதுரை

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மாணவர்கள் நூல்களை ______________ கற்க வேண்டும்.
   அ) மேலோட்டமாக ஆ) மாசுற ***இ) மாசற*** ஈ) மயக்கமுற
2. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________
   அ) இடம் + மெல்லாம் ***ஆ) இடம் + எல்லாம்***
   இ) இட + எல்லாம் ஈ) இட + மெல்லாம்
3. மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________
   அ) மாச + அற ***ஆ) மாசு + அற*** இ) மாச + உற ஈ) மாசு + உற
4. குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் __________________
   ***அ) குற்றமில்லாதவர்*** ஆ) குற்றம்இல்லாதவர்
   இ) குற்றமல்லாதவர் ஈ) குற்றம்அல்லாதவர்
5. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _________
   அ) சிறப்புஉடையார் ***ஆ) சிறப்புடையார்*** இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார்

**குறுவினா**

1. **கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?**

மன்னனையும், குற்றம் இல்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனைவிடக் கற்றவரே சிறந்தவர். மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு என மூதுரை கூறுகிறது.

**சிந்தனை வினா**

1. **கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகளைப் பட்டியலிடுக.**

- கல்லாதவரை பெற்றோர்கள், உடன் பிறந்தோர், மனைவி, தம் மக்கள், உற்றார் உறவினர், சான்றோர்கள், ஆன்றோர்கள் மற்றும் ஊரார் ஆகியோரால் மதிக்கப்படமாட்டார்கள்.
- நன்மை தீமைகளைப் பகுத்தறிய இயலாது. எல்லோராலும் இகழப்படுவான்.
- கல்லாதவர், அரசு அலுவலகங்கள், வங்கிகள் முதலியவற்றிக்குச் சென்றால் தம்முடைய பணிகளை முடிப்பதற்கு இடர்படுவார், பிறர் உதவியை நாடியே நிற்பர்.
- தம்மிடம் இருக்கும் பணத்தைச் சரியாக எண்ணத்தெரியாமல் திண்டாடுவர்.
- கல்லாதோர் பேருந்துகளில் பயணம் செய்ய பிறரையே சார்ந்து நிற்பர். பேருந்து எங்கு செல்கிறது என்பதை கூட மற்றவரிடம் கேட்டே பயணம் செய்வர்.
- மனிதனுக்குக் கண் போன்றது கல்வி, கண் இல்லை என்றால் இவ்வுலகமே இருள் மயமாகி விடும். கற்றவரே கண்ணுடையவர், கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்களை உடையவர்.
- கல்லாதவர்கள் விலங்குகளுக்கு ஒப்பாக கருதப்படுவர்.

2. **கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?**

- ❋ எத்தனையோ செல்வங்கள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை மூன்று. அருட்செல்வம் அவ்வுலகத்துக்கு உரியது. பொருட் செல்வம் இவ்வுலகத்துக்கு உரியது. கல்விச் செல்வம் எவ்வுலகத்தும் சிறப்புத்தருவது.
- ❋ கல்வி மனிதனை உயர்த்துகிறது. கல்வியும் செல்வமாகக் கருதத்தக்கது, கல்வியை பிறருக்குத் தந்தாலும் குறையாமல் வளரும்.
- ❋ கல்வியைப் பிறரால் கைப்பற்றவோ அழிக்கவோ முடியாது.
- ❋ அழியாச் செல்வமாகிய கல்வியைக் கற்றவன் எங்கும் எப்போதும் சிறப்புப் பெறுவான். மன்னனாகவே இருந்தாலும் அவனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு கிடைக்கும். ஆனால் கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு கிடைக்கும்.
- ❋ அறிவியல், பொறியியல், பொருளியல் முதலியவற்றை வளர்ந்தோங்கச் செய்வது கல்வியே. கல்வியால் மனிதன் விண்ணையும் மண்ணையும் அளக்க அறிந்து கொண்டான். இன்றைய உலகில் அறிவியலின் கண்டுபிடிப்புகள் நாள்தோறும் பெருகிய வண்ணமாக உள்ளன. ஒருவனுக்குள் புதைத்து கிடக்கும் அறியாமையைத் தோண்டி எடுப்பதே கல்வியாகும். உள்ளத்தை அறிவால் நிரப்பி ஒழுக்கத்தை வளர்த்திட, மனிதன் மனிதனாக வாழ்ந்திட நூல்களைக் கற்பதே கல்வியாகும்.

## கற்பவை கற்றபின்

1. **கல்வியே அழியாச் செல்வம் என்னும் தலைப்பில் பேசுக.**

வணக்கம்! எனது பெயர் கமலா. நான் கல்வியே அழியாச் செல்வம் என்னும் தலைப்பில் உங்களிடம் பேச வந்துள்ளேன். இன்றைய சமூகத்தில் கல்வி என்ற ஒன்றே ஒருவரின் முக்கிய தகுதியாக கருதப்படுகிறது. கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கு ஒப்பான சிறந்த செல்வம் வேறு எதுவுமில்லை. கல்வி யாராலும் அழிக்க முடியாத அழிவில்ல செல்வமாகும். கல்வி தான் ஒரு மனிதனை சிறந்த மனிதனாக, அறிவாளியாக மாற்றுகிறது. அறியாமை எனும் இருட்டைக் கல்வி எனும் ஒளிதான் போக்குகிறது. கல்வி ஒருவரை மட்டும் மேம்படுத்தாது அவனைச் சார்ந்தவர்களையும், அந்தச் சமூகத்தையும், ஏன் நாட்டையுமே உயா்த்த உதவுகிறது. கல்விச் செல்வம் அள்ள அள்ளக் குறையாது. கொடுத்தாலும் குறையாது. எடுத்தாலும் குறையாது.

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

இறைக்க இறைக்கச் சுரக்கும் நீர் போல அறிவானது கொடுக்கக் கொடுக்க வளர்ந்து கொண்டே இருக்கும் என்று திருவள்ளுவர் கூறுகிறார். "ஒருவன் கல்லாமல் இருப்பதை விடப் பிறவாமல் இருப்பதே மேல்" என்று கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி அறிஞர் பிளாட்டோ கூறுகிறார்.

பெற்றோர்களுக்கு ஒன்று மட்டும் கூற விரும்புகிறேன். உங்கள் குழந்தைக்குக் கல்வியின் அவசியத்தைப் புரிய வையுங்கள். கற்பதில் விருப்பத்தை உண்டாக்குங்கள்.
"ஒரு பெண் கல்வி கற்றால் அது அவளது குடும்பத்துக்கே கற்பிப்பதுபோல்" என்பார் பாரதிதாசன். கல்விதான் எது நல்லது? எது கெட்டது? எனப் பகுத்தறியக் கற்றுக் கொடுக்கும். ஒரு நாணயத்துக்கு இரு பக்கம் உண்டு என்பதையும் உணர வைக்கும். எந்த விஷயத்தையும் உற்று நோக்கக் கல்வி கற்றுக் கொடுக்கும். சுயசிந்தனையோடு நடந்து கொள்ளவும் கல்வியறிவே கைக் கொடுக்கிறது. இறுதியாக ஒருவன் தன் வாழ்நாளில் பல செல்வங்களைத் தேடலாம். அவையெல்லாம் விரைவில் அழிந்துபோகும். ஆனால், கல்வி ஒருநாளும் அழியாதது என்பதை கூறி இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி! வணக்கம்.

2. **கல்வி பற்றிய பழமொழிகள் அல்லது பாடல் அடிகள் எவையேனும் இரண்டனைப் பெரியோர்களிடம் கேட்டு எழுதி வருக.**

**பழமொழிகள்:**

1. கல்வி கரையில, கற்பவர் நாள் சில
2. கற்றது கையளவு, கல்லாதது உலகளவு
3. கல்வியே நாட்டின் முதன் அரண்
4. எண் இல்லாதவர் கண் இல்லாதவர். எழுத்து இல்லாதவர் கழுத்து இல்லாதவர்.

**பாடல்கள்:**

* கற்கை நன்றே கற்கை நன்றே
  பிச்சை புகினும் கற்கை நன்றே

  \- **வெற்றிவேற்கை**

* மழைவாழை அல்லவோ கல்வி - நீ
  வாயார உண்ணுவாய் போ என் புதல்வி

  \- **பாரதிதாசன்**

* ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
  ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
  மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
  வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்

  \- **உலகநீதி**

* இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
  தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
  எம்மை யுலகத்தும் யாங்காணோம் கல்விபோல்
  மம்மர் அறுக்கும் மருந்து

  \- **நாலடியார்**

# செய்யுள் : 2. துன்பம் வெல்லும் கல்வி

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மாணவர் பிறர் __________ நடக்கக் கூடாது.

   அ) போற்றும்படி ***ஆ) தூற்றும்படி*** இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி

2. நாம் _________ சொல்படி நடக்க வேண்டும்.

   அ) இளையோர் ஆ) ஊரார் ***இ) மூத்தோர்*** ஈ) வழிப்போக்கர்

3. கைப்பொருள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________

   அ) கையில் + பொருள் ஆ) கைப் + பொருள்
   ***இ) கை + பொருள்*** ஈ) கைப்பு + பொருள்

4. மானம் + இல்லா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _________

   அ) மானம்இல்லா ***ஆ) மானமில்லா*** இ) மானமல்லா ஈ) மானம்மில்லா

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. மனமாற்றம் - பெற்றோரின் அறிவுரையைக் கேட்ட குமரன் ***மனமாற்றம்*** அடைந்தான்.
2. ஏட்டுக் கல்வி - ***ஏட்டுக் கல்வியுடன்*** தொழிற்கல்வியும் பெறுதல் சிறப்பானது.
3. நல்லவர்கள் - ***நல்லவர்களுடன்*** சேர்ந்து பழகுதல் இன்பம் தரும்.
4. சோம்பல் - ***சோம்பல்*** தவிர்த்தால் வாழ்வில் உயரலாம்.

**குறுவினா**

**1. நாம் யாருடன் சேரக் கூடாது?**

நாம் தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேரக் கூடாது.

**2. எதை நம்பி வாழக் கூடாது?**

பிறர் உழைப்பை நம்பி வாழக் கூடாது.

**3. நாம் எவ்வாறு வாழவேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்?**

பெற்ற தாயின் புகழும் நம் தாய் நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழ வேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்.

**4. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?**

மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழவேண்டும். அதன்மூலம் வெற்றிகளையும் விருதுகளையும் பெருமையையும் பெறவேண்டும்.

**சிந்தனை வினா**

**நீங்கள் படித்து என்னவாக விரும்புகிறீர்கள்? ஏன்?**

நான் படித்து மாவட்ட ஆட்சியராக விரும்புகிறேன். ஏனெனில் மாவட்ட ஆட்சியரின் பணி ஒரு மாவட்டத்தையே பாதுகாக்கும் பணியாகும். அவருடைய அனுமதியின்றி பொது இடங்களைப் பயன்படுத்த முடியாது. எந்த அரசியல் கட்சிகளும் அவரை வழிநடத்த முடியாது. மக்கள் வாழும் இருப்பிடங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்வது முதல் ஏரி, குளங்கள் போன்ற நீர் நிலைகளைத் தூர்வாருதல் வரை அவருடைய இன்றியமையாதப் பணியாகும். அரசாங்கத்தின் கீழ் உள்ள அனைத்துத் துறைகளின் குறைகளை அவர் நினைத்தால் சரி செய்ய இயலும். அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் என அனைத்தும் அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கும்.

நான் மாவட்ட ஆட்சியரானால் அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவர் மற்றும் செவிலியர்களை அழைத்து, வாரம் ஒருமுறை அல்லது மாதம் இருமுறை நோய்களின் தன்மை குறித்தும், அவற்றிலிருந்து நம்மைப் பாதுகாப்பது குறித்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தச் செய்வேன். பள்ளிகளில் தூய்மையாக இருப்பதின் அவசியத்தைக் கூறி அதை சுத்தமாக வைத்துக் கொள்ள தகுந்த ஏற்பாடுகளைச் செய்வேன். நெகிழிப் பொருட்களைப் பற்றி விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவேன்.

நிலம் கையகப்படுத்துதல், வரிப் பணம் நிலுவை, வேளாண் கடன்கள் நிலுவை இவையெல்லாம் இல்லாமல் செய்வேன். பஞ்சம் அல்லது தொற்று நோய்கள், இயற்கை அழிவுகளின் போது மருத்துவ முகாம் அமைத்து மக்களை நோய்கள் அணுகாமல் இருக்க வழி வகை செய்வேன். சட்டம் ஒழுங்கு சீர்கெடாமல் பாதுகாப்பேன். இந்தியாவிலேயே என் ஆட்சியின் கீழ் உள்ள மாவட்டம் முதலிடம் பெறுவதற்கு என்னாலான எல்லாப் பணிகளையும் செய்வேன்.

## கற்பவை கற்றபின்

1. **பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**
   https://www.youtube.com/watch?v=_DgNq3Tnh3U
2. **நூலகத்திற்குச் சென்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய வேறு பாடல் ஒன்றை எழுதி வருக.**

   **மாற்றம் காணவே!**

   ரோட்டில் பள்ளம் மேடு எங்கும் பாருங்கள் - கோடை

   ஆற்று மணல் காட்சி அங்குப் பாருங்கள்!

   போக்குவரவை எச்சரிக்கும் செங்கொடி - அங்கே

   ரோட்டின் ஓரம் காற்றிலாடப் பாருங்கள்! பழுது

   பார்க்கும் தொழிலாளரைப் பாருங்கள்!

   ஏற்றத் தாழ்வு இருக்குமிடம் எங்குமே

   மாற்றம் காணவே பறக்கும் செங்கொடி!

3. **'ஏட்டுக் கல்வி மட்டும் கல்வி இல்லை' என்னும் தலைப்பில் பேசுக.**
   - வளரும் குழந்தைகள் தான் இந்த நாட்டின் கண்கள். நல்ல அறிவார்ந்த சமுதாயமாக ஒரு சமூகம் வளர வேண்டுமென்றால் பிள்ளைகளுக்கு அறிவுபூர்வமான கல்வியைக் கொடுக்க வேண்டும். வெறும் ஏட்டுக்கல்வி அவர்களை முன்னேற்றும் என்று சொல்ல முடியாது. ஆனால், கல்வியுடன் கூடிய செயல்முறை கல்வி என்பது அதிக பலன் தரக்கூடியது.
   - ஒரு செயல்பாட்டுக் கல்விமுறையைத்தான் 'லீப்பிராக்' என்ற ஒரு கல்வி நிறுவனம் செய்து வருகிறது. அமெரிக்காவில் பயிலும் மாணவன் எத்தகைய செயல்பாட்டுக் கல்வியைப் பெறுகிறானோ, அதற்குச் சற்றும் குறையாமல் தமிழகத்தில் இவர்களும் பெறும் வண்ணம் செயல்படுத்தி வருகிறார்கள். இதற்கான பயிற்சியை இவர்கள் அமெரிக்காவில் பெற்றிருக்கிறார்கள்.
   - கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் 'கிட்ஸ் இன்வென்ட்' என்ற ஒரு துறையின் தலைவராக இருக்கும் திரு.சோபே அவர்களின் தலைமையில் இந்த அமைப்பு இயங்குகிறது. இவர்களின் இந்தச் செயல்முறைக் கல்வி நமது சமச்சீர் பாடத்திட்டத்துடன் ஒருங்கிணைத்து உள்ளதால் இதில் பயிலும் மாணவர்கள் கல்வி கற்கும்போதே அதன் பயன்பாட்டை உணர்கிறார்கள். அது மட்டுமல்லாமல் மாணவர்கள் வெள்ளிக்கிழமையானாலே ஆர்வத்துடன் இந்த வகுப்பிற்காக காத்திருக்கிறார்கள்.
   - இதற்காக இவர்கள் எடுத்துக்கொள்ளும் பொருட்கள் அனைத்தும் நாம் வீட்டில் தூக்கி எறியும் பொருட்களாகும். அதைக் கொண்டே புதுப்புதுப் பொருட்களை உருவாக்குகிறார்கள். அவைகளை மறுசுழற்சி முறையில் பயன்படுத்துகிறார்கள். இப்போதே குழந்தைகளுக்குப் பூமியைத் தூய்மையாக வைத்திருப்பது எப்படி என்று கற்றுக் கொடுக்கிறார்கள். வாரக் கடைசி நாளான வெள்ளிக்கிழமையன்று கிளப் பிரிவு என்ற ஒரு நேரம் எல்லா பள்ளிகளிலும் இருக்கும். அந்த நேரத்தில் இவர்கள் இந்த செயல்பாட்டுக் கல்வியை நடத்துகிறார்கள். இதற்காக இவர்கள் பள்ளிகளுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு அதை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.
   - இப்போது சென்னையில் மட்டுமே இருக்கும் இதன் கிளைகள் கூடிய விரைவில் தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்ய இருக்கிறார்கள்.

* உதாரணத்திற்கு விசை என்று பொதுவாக குழந்தைகளுக்குச் சொல்லாமல் ஒரு பொம்மைக் காரை மாணவர்களைக் கொண்டே உருவாக்குகிறார்கள். ஒரு புள்ளியிலிருந்து மற்றொரு புள்ளிக்கு அதை நகர்த்தும்போது ஏற்படுகின்ற விசை எப்படி உருவாகிறது என்று செயல்முறைக் கல்வி மூலம் சொல்லிக் கொடுக்கிறார்கள். பார்ப்பதற்கு மிகச் சாதாரணமாக தோன்றினாலும் மாணவர்களின் மனதில் இது ஆழமாக பதிகிறது. இதுபோல, ஒளி எப்படி பாய்கிறது என்பதை செய்முறை மூலம் விளக்குகிறார்கள்.
* "மாணவப் பருவத்தின் துவக்கத்தில் கிடைக்கின்ற கல்வி நடைமுறையோடு தொடர்பு உள்ளதாக இருந்தால் மாணவர்கள் பிற்காலத்தில் மிகப் பெரிய பயனை அடைவார்கள். சிறு வயதிலேயே தாங்கள் கற்பது இன்னது என்ற புரிந்துணர்வு மாணவர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. அடுத்து வரும் வகுப்புகளில் கூட இது எப்படி என்ற மூலாதார முறையை அறிந்து கொள்வதால் கல்விக் கடலில் திறம்பட நீந்த வழிவகை செய்கிறது" என்று சொல்கிறார்கள் இதன் நிறுவனர்கள்.

## உரைநடை : கல்விக்கண் திறந்தவர்

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடுமேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் ______________
   அ) ஆடு மேய்க்க ஆள் இல்லை **ஆ) ஊரில் பள்ளிக்கூடம் இல்லை**
   இ) வழி தெரியவில்லை ஈ) பேருந்து வசதியில்லை
2. பசியின்றி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________
   **அ) பசி + இன்றி** ஆ) பசி + யின்றி இ) பசு + இன்றி ஈ) பசு + யின்றி
3. படிப்பறிவு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________
   அ) படி + அறிவு **ஆ) படிப்பு + அறிவு** இ) படி + வறிவு ஈ) படிப்பு +வறிவு
4. காடு + ஆறு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ____________
   **அ) காட்டாறு** ஆ) காடாறு இ) காட்டு ஆறு ஈ) காடுஆறு

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

| | |
|---|---|
| வகுப்பு | ***வகுப்பில்*** உள்ள மாணவர்கள் அனைவரும் மற்ற மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். |
| உயர்கல்வி | மாணவர்கள் ***உயர்கல்வி*** பெற்று சமுதாயத்தில் சிறந்து விளங்கிட வேண்டும். |
| சீருடை | பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றி மாணவர்கள் கல்வி கற்க காமராசர் ***சீருடைத்*** திட்டத்தைக் கொண்டு வந்தார். |

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. குழந்தைகள் பள்ளியில் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்க ***சீருடையை*** அறிமுகப்படுத்தினார்.
2. காமராசரைக் 'கல்விக் கண் திறந்தவர்' என மனதாரப் பாராட்டியவர் ***தந்தை பெரியார்.***

### குறுவினா

**1. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?**

- ❋ பொறியியல் கல்லூரிகள்
- ❋ மருத்துவக் கல்லூரிகள்
- ❋ கால்நடை மருத்துவக் கல்லூரிகள்
- ❋ ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள்

**2. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?**

- ❋ காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் தமிழகத்தில் மூடப்பட்டிருந்த ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகளை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.
- ❋ மாநிலம் முழுவதும் மாணவர்களுக்கு இலவச மற்றும் கட்டாய கல்வி சட்டத்தை இயற்றி அதை தீவிரமாக நடைமுறைப்படுத்தினார்.

### சிறுவினா

**காமராசரின் கல்விப்பணிகள் குறித்து எழுதுக.**

**காமராசரின் கல்விப்பணிகள் :**

- ❋ காமராசர் முதல் அமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.
- ❋ மாநிலம் முழுவதும் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றி தீவிரமாக நடைமுறைப்படுத்தினார்.
- ❋ மாணவர்கள் பசியின்றிப் படிக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.
- ❋ பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றிக் குழந்தைகள் கல்விக் கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார்.
- ❋ பள்ளிகளின் வசதிகளைப் பெருக்கப் பள்ளிச்சீரமைப்பு மாநாடுகள் நடத்தினார்.
- ❋ மாணவர்கள் உயர்க்கல்வி பெறப் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கால்நடைமருத்துவக் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றைப் புதிதாகத் தொடங்கினார்.
- ❋ தமிழ்நாட்டில் பல கிளை நூலகங்களைத் தொடங்கினார். இவையே காமராசரின் கல்விப்பணிகள் ஆகும்.

### சிந்தனை வினா

**நீங்கள் முதலமைச்சரானால் கல்வி முன்னேற்றத்திற்காக என்னென்ன திட்டங்களை வகுப்பீர்கள்?**

நான் முதலமைச்சரானால் மாணவர்களுக்குப் பயன்தரும் பல திட்டங்களை உருவாக்குவேன். மாணவர்கள் சிரமமின்றி பள்ளிக்குச் சென்றுவர சிறப்புப் பேருந்துகளை இயக்க உத்தரவிடுவேன். ஏழை மாணவர்களுக்கு உயர்கல்வி பெற உதவித்தொகை வழங்குவேன். பெண் கல்விக்கு ஊக்கமளித்து சிறந்த பெண்களை இச்சமுதாயத்தில் உருவாக்குவேன்.

பாதாள சாக்கடைகளை ஒருங்கிணைத்து மழை காலங்களில் சாலைகளில் மழை நீர் தேங்காமல் இருப்பதற்கு வழிவகை செய்வேன். மின் பற்றாக்குறையைப் போக்க புதிய மின் உற்பத்தி நிலையங்கள் துவங்க உத்தரவிடுவேன். தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அனைவருக்கும் வேலைவாய்ப்பளிக்க விரைந்து செயல்படுவேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் உணவுப்பொருட்களுக்கு அவர்களே விலை நிர்ணயம் செய்யும் முறையை உருவாக்குவேன். ஏழை எளிய மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகியவை கிடைக்க வழிவகைசெய்வேன். மேலும் இம்மாநிலத்தை பல வழிகளில் வளர்ச்சி பாதைக்கு அழைத்து செல்ல வேண்டிய முயற்சிகளை எடுப்பேன்.

## கற்பவை கற்றபின்

**1. காமராசரின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்வு ஒன்றினை அறிந்து வந்து வகுப்பறையில் பேசுக.**

கர்மவீரர் காமராஜர் ஒரு முறை, தஞ்சை மாவட்டத்திலிருந்த பழைமையான கோவில் ஒன்றைப் பார்வையிடச் சென்றார். பாழடைந்த நிலையை அடைந்திருந்தாலும் அந்தக் கோவிலின் கட்டுமானம் அவரை வியக்க வைத்தது. ஓர் இடத்தில் நின்றவர், "இந்தக் கோவிலைக் கட்டுனது யாரு? எனக் கேட்டார். உடன் வந்த அதிகாரிகளுக்கு அதுபற்றி தெரியவில்லை. பதில் சொல்லத் தெரியாமல் விழித்தனர். உடனே, சிரித்துக் கொண்டே மேலே இருந்த டியூப் லைட்டை சுட்டிக்காட்டிய காமராஜர், "இவ்வளவு காலம் நிலைச்சு நிக்கிற இந்தக் கோவிலைக் கட்டியவர் யாருன்னு தெரியலே... ஆனால், ஒரு மாதம் கூட ஒழுங்கா எரியாத இந்த டியூப் லைட்ல உபயதாரர் யாருன்னு எவ்வளவு பெரிசா எழுதி வெச்சிருக்காங்கன்னு பாருங்களேன்" என்று கூறினார். உடனே, உடன் வந்தவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்களாம்!

**2. தற்போது மாணவர்களுக்கு அரசு அளிக்கும் நலத்திட்டங்களைப் பட்டியலிடுக.**

- இலவச பாடப் புத்தகங்கள்
- ஊக்கத்தொகை
- பேருந்தில் இலவச பயணம்
- எழுதுகோல்
- வண்ணப் பென்சில்
- காலணிகள்
- புத்தகப் பை
- ஏடுகள்
- இலசவ சீருடை
- மடிக்கணினி
- பென்சில்
- கல்வி மானியம்
- மதிய உணவு
- இலவச (சைக்கிள்) மிதிவண்டி.

## விரிவானம் : நூலகம் நோக்கி

## மதிப்பீடு

**அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.**

**முன்னுரை :**

அண்ணா நூலகம், ஆசியக்கண்டத்திலேயே இரண்டாவது பெரிய நூலகம் ஆகும். இதன் பரப்பளவு எட்டு ஏக்கர் ஆகும். இந்த நூலகம் தரைத்தளத்துடன் எட்டு அடுக்குகளைக் கொண்டது. அங்கு, இந்திய நூலக விதிகளை உருவாக்கிய இந்திய நூலக அறிவியலின் தந்தையான முனைவர் இரா. அரங்கநாதன் அவர்களின் உருவப்படம் உள்ளது.

**தரைத்தளம்:**

தரைத்தளத்தில் பார்வை திறன் குறைபாடு உடையோருக்கான பிரிவு உள்ளது. அவர்கள் தொட்டுப் பார்த்துப் படிப்பதற்கான பிரெய்லி நூல்கள் உள்ளன. கேட்டு அறிய ஒலி வடிவ நூல்கள் குறுந்தகடுகள் வடிவில் உள்ளன. அவர்களுக்கு உதவி செய்யப் பணியாளர்களும் உள்ளனர். இங்கு பிரெய்லி எழுத்தில் நூல்களை உருவாக்கும் கருவியும் உள்ளது. படியெடுக்கும் வசதியும் உண்டு.

**முதல் தளம்:**

முதல் தளம் குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட பகுதி, குழந்தைகள் மகிழ்ச்சியான சூழலில் படிப்பதற்காகச் செயற்கை மரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கு இருபது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்லூடக குறுந்தகடுகள் குழந்தைகளுக்காகச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. பிற நாடுகளில் இருந்து திரட்டப்பட்ட ஐம்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன.

**பிற தளங்கள்:**

- இரண்டாம் தளத்தில், சங்ககாலம் தொடங்கி இன்றுவரை உள்ள அனைத்து தமிழ் நூல்களும் உள்ளன.
- மூன்றாம் தளத்தில், கணினி அறிவியல், தத்துவம், அரசியல் நூல்கள் உள்ளன.
- நான்காம் தளத்தில், பொருளியல், சட்டம் வணிகவியல், கல்வி போன்ற நூல்கள் உள்ளன.
- ஐந்தாம் தளத்தில், கணிதம், அறிவியல், மருத்துவம் தொடர்பான நூல்கள் உள்ளன.
- ஆறாம் தளத்தில், பொறியியல், வேளாண்மை, திரைப்படக்கலை சார்ந்த நூல்கள் உள்ளன.
- ஏழாம் தளத்தில் பழமையான ஓலைச் சுவடிகள் சேகரித்துப் பாதுகாத்து வைக்கப்பட்டு உள்ளன.
- மின் நூலகமும் உள்ளது. அனைத்துத் துறை சார்ந்த தரமான மின்நூல்களும் மின் இதழ்களும் உள்ளன.
- எட்டாம் தளம் நூலகத்தில் கூட்ட அரங்கு, கலையரங்கு, கருத்தரங்க கூடம், கண்காட்சி அரங்கு போன்றவையும் உள்ளன.

**முடிவுரை:**

நூலகத்தில் உள்ள நூல்களை வாசிப்பதோடு நிற்காமல், இந்நூல்களைச் சுவாசிக்கும் அறிஞர்களாக நாம் மாற வேண்டும்.

"நூலகம் அறிஞர்களின் ஆன்மாக்கள் உறைவிடம்".

## கற்பவை கற்றபின்

**1. நூலகங்களின் உள்ள புத்தகங்களில் உங்களுக்குப் பிடித்தமான நூல்களைப் பட்டியலிடுக.**

- மகாத்மா காந்தி சுயசரிதை
- பாரதியார் கவிதைகள்
- நீ ஒரு தனிப்பிறவி
- திருக்குறள்
- பொன்னியின் செல்வன்
- தண்ணீர் தேசம்
- சிவகாமியின் சபதம்
- பார்த்திபன் கனவு
- அக்னி சிறகுகள்
- சிந்தித்துப் பார்
- ஒரு சிறு இசை
- ஸ்ரீரங்கத்து தேவதைகள்

**2. நீங்கள் விரும்பிப் படித்த நூல் குறித்து நண்பனுடன் உரையாடுக.**

சுசீலா : வணக்கம் ஐஸ்வர்யா! நலமாக இருக்கிறாயா?

ஐஸ்வர்யா : வா சுசீலா, நான் நலமாக இருக்கிறேன். வெகு நாட்கள் கழித்து வீட்டிற்கு வந்துள்ளாய். நீ எப்படி இருக்கிறாய்?

சுசீலா : நலமாய் இருக்கிறேன். என்ன புத்தகம் அது? என்ன படித்துக் கொண்டு இருக்கிறாய்?

ஐஸ்வர்யா : இது அக்பர் - பீர்பால் கதைகள்.

சுசீலா : அப்படியா. இந்த நூல் எதை பற்றி கூறுகிறது ஐஸ்வர்யா.

ஐஸ்வர்யா : இந்நூலில் அக்பர் என்ற மன்னருக்கும் அவரின் புத்திசாலி அமைச்சரான பீர்பாலுக்கும் இடையே நடக்கும் சுவாராசியமான சம்பவங்கள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

சுசீலா : அப்படியா, அதில் ஏதேனும் ஒரு சம்பவத்தை எனக்கு கூறுவாயா ஐஸ்வர்யா?

ஐஸ்வர்யா : கண்டிப்பாக. எப்போதும் அக்பர் காலையில் எழுந்தவுடன் விநாயகர் படத்தில் விழிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால் ஒருநாள் ஒரு சிப்பாயின் முகத்தில் விழித்து விட்டார். அன்று முழுவதும் பல பிரச்சினைகளைச் சந்திக்க நேரிட்டது. அதனால், கோபத்தில் அச்சிப்பாய்க்கு மரண தண்டனை விதித்து விட்டார். அதைக் கேட்ட பீர்பால் பயங்கரமாகச் சிரித்தார்.

சுசீலா : ஏன் பீர்பால் இச்சமயத்தில் சிரித்தார்? அது அக்பரின் கோபத்தை அதிகபடுத்துமே.

ஐஸ்வர்யா : ஆமாம் சுசீலா. அக்பர் கோபத்துடன் பீர்பாலைக் கண்டு ஏன் சிரிக்கிறீர்கள் என கேட்டார். அதற்கு பீர்பால், “நீங்கள் அவனுடைய முகத்தில் விழித்ததால் உங்களுக்கு பிரச்சனைகள் மட்டுந்தான் வந்தது. ஆனால் அவன் உங்கள் முகத்தில் விழித்ததால் அவனுக்கு உயிரே போகபோகிறதே, அப்போ யாருடைய முகம் அபசகுணமானது என நினைத்து சிரித்தேன்” என்றார். இதனைக்கேட்ட அக்பர் தன் தவறை உணர்ந்து சிப்பாயின் தண்டனையை ரத்து செய்தார்.

சுசீலா : அருமையான கதை ஐஸ்வர்யா. நீ படித்து முடித்தவுடன் இந்தப் புத்தகத்தை எனக்குத் தருகிறாயா?

ஐஸ்வர்யா : கண்டிப்பாக சுசீலா.

## கற்கண்டு : இன எழுத்துக்கள்

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?

அ) மஞ்சள் ஆ) வந்தான் ***இ) கண்ணில்*** ஈ) தம்பி

2. தவறான சொல்லை வட்டமிடுக.

அ) கண்டான் ***ஆ) வென்ரான்*** இ) நண்டு ஈ) வண்டு

## பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.

| பிழை | திருத்தம் |
|---|---|
| தெண்றல் | தென்றல் |
| கன்டம் | கண்டம் |
| நன்ரி | நன்றி |
| மன்டபம் | மண்டபம் |

## குறுவினா

**இன எழுத்துகள் என்றால் என்ன?**

சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு. இவ்வாறு ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.

## கற்பவை கற்றபின்

தங்கப் பாப்பா வந்தாளே!
சிங்கப் பொம்மை தந்தாளே!
பஞ்சு போன்ற கையாலே!
பண்டம் கொண்டு வந்தாளே!
பந்தல் முன்பு நின்றாளே!
கம்பம் சுற்றி வந்தாளே!
தென்றல் காற்றும் வந்ததே!
தெவிட்டா இன்பம் தந்ததே!

**இப்பாடலில் இடம்பெற்றுள்ள இன எழுத்துச் சொற்களை எடுத்து எழுதுக.**

தங்கப் வந்தாளே சிங்கப்

- தந்தாளே
- பஞ்சு
- பண்டம்
- கொண்டு
- வந்தாளே
- பந்தல்
- நின்றாளே
- கம்பம்
- வந்தாளே
- தென்றல்
- வந்ததே
- தந்ததே.

# மொழியை ஆள்வோம்!

## படித்துச் சுவைக்க

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

- குறள் எண்: 397

ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடுஇல்லை-அந்நாடு
வேற்றுநாடு ஆகா தமவேஆம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவது இல்.

- பழமொழி நானூறு: 4

**தொடர்களை நீட்டித்துப் புதிய தொடர்களை உருவாக்குங்கள்.**

**(எ.கா.)**

| | |
|---|---|
| பாடம் படித்தான். | ***மழை பெய்தது.*** |
| வகுப்பில் பாடம் படித்தான். | ***கன மழை பெய்தது.*** |
| தமிழ் வகுப்பில் பாடம் படித்தான். | ***ஊரில் கன மழை பெய்தது.*** |
| நேற்று தமிழ் வகுப்பில் பாடம் படித்தான். | ***எங்கள் ஊரில் கன மழை பெய்தது.*** |
| அவன் நேற்று தமிழ் வகுப்பில் பாடம் படித்தான். | ***நேற்று எங்கள் ஊரில் கன மழை பெய்தது.*** |

**இரு பொருள் தரக்கூடிய சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்கள் அமையுங்கள்.**

**(நூல், மாலை, ஆறு, படி)**

**(எ.கா.)** ஆடை தைக்க உதவுவது நூல்

மூதுரை அற நூல்

| | | |
|---|---|---|
| மாலை | வெற்றி பெற்றவன் சூடுவது மாலை | சூரியன் மறையும் நேரம் மாலை |
| ஆறு | கங்கை மிகப் பெரிய ஆறு | எண்களில் ஒன்று ஆறு |
| படி | அளவு கருவிகளில் ஒன்று படி | புத்தகத்தை நன்றாக படி |

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குங்கள்.**

| | | |
|---|---|---|
| ஆசிரியர்<br>மாணவன் | கவிதை<br>பாடம் | எழுதுகிறார்<br>எழுதுகிறான்<br>படிக்கிறார்<br>படிக்கிறான்<br>கற்பிக்கிறார் |

**விடைகள்:**

| | |
|---|---|
| ***ஆசிரியர் கவிதை எழுதுகிறார்.*** | ***ஆசிரியர் பாடம் எழுதுகிறார்.*** |
| ***மாணவன் கவிதை எழுதுகிறான்.*** | ***மாணவன் பாடம் எழுதுகிறான்.*** |
| ***ஆசிரியர் கவிதை படிக்கிறார்.*** | ***ஆசிரியர் பாடம் படிக்கிறார்.*** |
| ***மாணவன் கவிதை படிக்கிறான்.*** | ***மாணவன் பாடம் படிக்கிறான்.*** |
| ***ஆசிரியர் கவிதை கற்பிக்கிறார்.*** | ***ஆசிரியர் பாடம் கற்பிக்கிறார்.*** |

**உரையாடலை நிறைவு செய்யுங்கள்.**

மாணவர் : வணக்கம் ஐயா.

தலைமை ஆசிரியர் : வணக்கம் மதி, உனக்கு என்ன வேண்டும்?

மாணவர் : எனக்கு மாற்றுச் சான்றிதழ் வேண்டும் ஐயா.

தலைமை ஆசிரியர் : ***நீ நன்றாக படிப்பாயே! எதற்காக மாற்றுச் சான்றிதழ் கேட்கிறாய்?***

மாணவர் : என் தந்தைக்குப் பணி மாறுதல் கிடைத்திருக்கிறது ஐயா.

தலைமை ஆசிரியர் : அப்படியா! எந்த ஊருக்குப் பணி மாறுதல் கிடைத்திருக்கிறது?

மாணவர் : ***திருச்சிக்கு ஐயா.***

தலைமை ஆசிரியர் : அங்கு எந்தப் பள்ளியில் சேரப் போகிறாய்?

மாணவர் : ***செஞ்சிலுவை மேல்நிலைப் பள்ளி ஐயா.***

தலைமை ஆசிரியர் : ***உன் பெற்றோரை அழைத்து வந்திருக்கிறாயா?***

மாணவர் : என் அப்பாவை அழைத்து வந்திருக்கிறேன் ஐயா.

**கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைவர்களின் பிறந்த நாள் எந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது.**
(குழந்தைகள் நாள், மாணவர் நாள், ஆசிரியர் நாள், தேசிய இளைஞர் நாள், கல்வி வளர்ச்சி நாள்)

1. காமராசர் பிறந்த நாள் ___________.
2. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் பிறந்தநாள் __________
3. அப்துல்கலாம் பிறந்த நாள் ______________.
4. விவேகானந்தர் பிறந்த நாள் ______________.
5. ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் ___________ .

**விடைகள்**

1. **கல்வி வளர்ச்சி நாள்**
2. **ஆசிரியர் நாள்**
3. **மாணவர் நாள்**
4. **தேசிய இளைஞர் நாள்**
5. **குழந்தைகள் நாள்**

**இன எழுத்துகள் அமைந்துள்ள சொற்களை வட்டமிடுங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| ***கங்கை***, | பக்கம், | ***வண்டு***, | ***மண்டபம்***, | ***மங்கை***, |
| ***வெந்தயம்***, | ***தந்தயம்***, | ***பஞ்சு***, | தக்காளி, | ***மஞ்சள்***, |
| ***கம்பளம்***, | ***குன்று***, | காக்கை, | ***செங்கடல்***, | ***தேங்காய்*** |

**கீழ்க்காணும் சொற்களுள் அமைந்துள்ள இன எழுத்துகளை எடுத்து எழுதுங்கள்.**

சங்கு, நுங்கு, பிஞ்சு, வஞ்சம், பண்டம், சுண்டல், வண்டி,

பந்தயம், பந்து, கற்கண்டு, தென்றல், நன்று

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சங்கு | - | ங்கு | நுங்கு | - | ங்கு |
| பிஞ்சு | - | ஞ்சு | வஞ்சம் | - | ஞ்ச |
| பண்டம் | - | ண்ட | சுண்டல் | - | ண்ட |
| வண்டி | - | ண்டி | பந்தயம் | - | ந்த |
| பந்து | - | ந்து | கற்கண்டு | - | ண்டு |
| நன்று | - | ன்று | தென்றல் | - | ன்ற |

**பின்வரும் பத்தியைப் படித்து வினாவிற்கேற்ற விடையளிக்கவும்.**

காமராசரின் வீட்டுக்குள் ஒரு சிறுவனும் அவனுடைய தங்கையும் நுழைய முயன்றனர். ஊழியர் அவர்களைத் தடுப்பதைக் காமராசர் கவனித்தார். உடனே அவர்களை உள்ளே அழைத்தார். "யாரைப் பார்க்க வந்தீங்க?" என்று அன்புடன் வினாவினார். "எங்க அண்ணனுக்குத் தேர்வுக்குப் பணம் கட்ட அம்மாவிடம் வசதியில்லே. உங்களைப் பார்த்தால்..." என்று சிறுமி கூறி முடிப்பதற்குள், "அம்மா அனுப்பி விட்டாரா?" என்று காமராசர் கேட்டார். "இல்லை நாங்களாகத்தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாகக் கொண்டு போய் வித்திட்டு வருவாங்க. அதில் வரும் வருமானத்தை வச்சுத்தான் எங்களைப் படிக்க வைக்கிறாங்க" என்று குழந்தைகள் கூறினர். அதனைக் கேட்டதும் மாடியேறிச் சென்று பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்.

மறுநாள் குழந்தைகள் இருவரும் காமராசரைத் தேடி வந்தனர். "ஐயா தேர்வுக்குப் பணம் கட்டியாச்சு. இந்த இரசீதை (பற்றுச் சீட்டை) அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க" என்றனர். அதனைக் கேட்டுக் காமராசர் மனம் நெகிழ்ந்தார்.

1. **காமராசரின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர்கள் ________.**

   அ) பெற்றோர் **ஆ) சிறுவன், சிறுமி** இ) மக்கள் ஈ) ஆசிரியர்கள்

2. **இந்நிகழ்வு சிறுவனது குடும்பத்தின் எப்பண்பை விளக்குகிறது ________.**

   அ) ஏழ்மை **ஆ) நேர்மை** இ) உழைப்பு ஈ) கல்லாமை

3. மறுநாள் குழந்தைகள் வந்ததும் காமராசர் மனம் **நெகிழ்ந்தார்.**
4. **சிறுவனும் சிறுமியும் எதற்காகக் காமராசரின் வீட்டிற்கு வந்தனர்?**

   சிறுவனுக்கு தேர்வு பணம் கட்ட உதவி கேட்டு வந்தனர்.

5. **காமராசர் செய்த உதவி யாது?**

   காமராசர் சிறுவனுக்குத் தேர்வு பணம் கட்ட பண உதவி செய்தார்.

## கட்டுரை எழுதுக.

காமராசர் என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

**முன்னுரை :**

பெருந்தலைவர் என்று தமிழ்நாட்டு மக்களால் அன்போடு அழைக்கப்பட்டவர் காமராஜர். இவர் ஏழை எளிய மக்களுக்காக ஆற்றிய பணிகள் அதிகம். இவர் முதல்வராக இருந்தபோது ஏழை மக்களுக்கு அது பொற்காலமாக விளங்கியது. அந்த அளவிற்கு அவர் தாழ்த்தப்பட்ட மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்குத் தனது உதவிகளை, பல திட்டத்தின் மூலம் நிறைவேற்றினார். அந்த ஒப்பற்ற வள்ளல் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**இளமைக் காலம் :**

தனது தொடக்கப் பள்ளிப் படிப்பைத் தனது சொந்த ஊரான விருதுநகரில் சத்திரிய வித்யா சாலா என்ற பள்ளியில் பயின்றார். ஆனால், அவரால் தொடர்ந்து படிக்கமுடியவில்லை. காரணம் அவரது பள்ளி படிப்பினை துவங்கிய சிறிது காலத்தில் அவரது தந்தை இறந்து விட்டார். பிறகு அவரது தாய் அவரை மிகவும் கடினப்பட்டு வளர்த்தார். தாயின் துன்பத்தை உணர்ந்த காமராஜர் தனது படிப்பினை துறந்து தன்னுடைய அம்மாவிற்காக, அவரது மாமாவின் துணிக்கடையில் வேலைக்கு சேர்ந்தார். தனது மாமாவின் துணிக்கடையில் வேலை செய்யும் போது பல தலைவர்கள் உரையாற்றுவதை பார்த்து அவர்களது போராட்ட குணத்தால் ஈர்க்கப்பட்டு 1920ஆம் ஆண்டு தனது 16ஆவது வயதில் காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டார். அன்றுமுதல் அவர் மக்களுக்காக அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும் என்று தனது மனதிற்குள் எண்ணினார்.

முதன் முதலில் 1930ஆம் ஆண்டு வேதாரண்யத்தில் ராஜாஜி தலைமையில் உப்பு சத்தியாகிரக போராட்டம் தமிழகத்தில் நடந்தது. அதில் பங்கேற்று நடத்தியதற்காக அவர் கைது செய்யப்பட்டு கல்கத்தாவில் உள்ள அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார். பிறகு ஒரு வருட தண்டனைக்குப் பின் விடுதலைச் செய்யப்பட்டார். அவரது வாழ்நாளில் 9 ஆண்டுகள் மக்களுக்காக அவர் சிறை சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்விப் பணி :**

குலக்கல்வி திட்டத்தினை கைவிட்டார். தமிழகத்தில் மூடி இருந்த 6000 பள்ளிகளை மீண்டும் திறந்தார். மேலும் 17000க்கும் மேற்பட்ட பள்ளிகளைத் தமிழகம் முழுவதும் உள்ள சின்ன சின்ன கிராமங்களுக்கு அவரே சென்று திறந்து வைத்தார்.

பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் 4,267 தொடக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டு, 6,076 படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பணி வழங்கப்பட்டது.

தாழ்த்தப்பட்டோர் குழந்தைகளுக்கு மட்டுமே இலவசக் கல்வி என்ற நிலையை மாற்றி, 100 ரூபாய் வரை சம்பளம் பெறும் பிற சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகளும் இலவசமாய் தொடக்கக் கல்வி கற்கும் சட்டத்தை கொண்டு வந்தவர் பெருந்தலைவர் காமராஜர்.

பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் கல்லூரிகளில் தமிழ் வழிக் கல்வி அறிமுகப் படுத்தப்பட்டது. கோவை அரசு கல்லூரியில் முதலில் அறிமுகப் படுத்தப்பட்டது.

பள்ளிச் செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை 1965ல் 4,36,000 ஆக இருந்தது. 1962ல் 9,00,000 லட்சமாக உயர்ந்தது. 1951 ல் ஆண்களுக்கு 27 ஆகவும் பெண்களுக்கு 9 ஆகவும் இருந்த கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை, பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் முறையே 44 மற்றும் 16 ஆக உயர்த்தப் பட்டது.

பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 10ஆக உயர்த்தப்பட்டது. மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 6ஆக உயர்த்தப்பட்டது. ஐஐடி கல்வி நிறுவனங்களும் துவக்கப்பட்டன.

**நிறைவேற்றிய பிறத்திட்டங்கள் :**

ஒருமுறை தனது அமைச்சரவை குழுவினை கூட்டி, தமிழக பள்ளி தேர்ச்சி மற்றும் எண்ணிக்கை குறித்து அமைச்சர்களிடம் பேசினார். அவர்களிடம் ஆலோசித்த பிறகு காமராஜர் ஒரு முடிவுக்கு வந்தார். மாணவர்கள் பள்ளிக்கு வர முதலில் நாம் ஒரு வழி செய்யவேண்டும் என்று நினைத்த அவர் மதியஉணவு அளித்தால் கண்டிப்பாக ஏழை மாணவர்கள் பள்ளிக்கு வருவார்கள் என்று முடிவு செய்து மதிய உணவு திட்டத்தினை துவங்கினார்.

இடைநிலை ஆசிரியர் பயிற்சியைப் பெற்றவர்களுக்கும் பயிற்சி பெறாத, பள்ளி இறுதித் தேர்வை முடித்தவர்களுக்கும், பட்டதாரி இளைஞர்களுக்கும் பள்ளிகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது.

காமராஜர் கல்வித் துறையில் மட்டுமல்லாமல், தொழில்துறை, நீர்பாசனத் திட்டங்கள், மின் திட்டங்கள் போன்றவற்றிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தினார். தமிழகத்தில் தொழில் துறைகளை வளர்ப்பதை குறிக்கோளாகக் கொண்டு, பல்வேறு நடவடிக்கைகளைச் செயல்படுத்தத் தொடங்கினார். நெய்வேலி நிலக்கரித் திட்டம், பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலை, திருச்சி பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ், கல்பாக்கம் அணு மின்நிலையம், ஊட்டி கச்சா ∴பிலிம் தொழிற்சாலை, கிண்டி டெலிபிரிண்டர் தொழிற்சாலை, மேட்டூர் காகிதத் தொழிற்சாலை, சேலம் இரும்பு உருக்கு ஆலை, பாரத மிகுமின் நிறுவனம், இரயில் பெட்டித் தொழிற்சாலை, நிலக்கரி புகைப்படச் சுருள் தொழிற்சாலை என பல தொழிற்சாலைகள் காமராஜரால் உருவாக்கப்பட்டன. இதைத் தவிர மேட்டூர் கால்வாய்த்திட்டம், பவானி திட்டம், காவேரி டெல்டா வடிகால் அபிவிருத்தி திட்டம், மணிமுத்தாறு, அமராவதி, வைகை, சாத்தனூர், கிருஷ்ணகிரி, ஆரணியாறு போன்ற நீர்பாசன திட்டங்களையும் ஏற்படுத்தினார். காமராஜர் ஆட்சியின் இறுதியில், தமிழகம் தொழில் வளர்ச்சியில் வடநாட்டு மாநிலங்களைப் பின்னுக்குத் தள்ளி, இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

**முடிவுரை :**

வாழ்நாளில் பல உதவிகளை மக்களுக்காக செய்த மக்கள் தலைவன் காமராஜர் அவர்கள், 1975 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி தன்னுடைய 72 வது வயதில் காலமானார். ஒரு மாநிலத்தின் முதல்வராக இருந்தும், சாகும் வரை அவர் வாடகை வீட்டிலேயே வசித்தார். மேலும் கதர் ஆடையினை மட்டுமே வைத்திருந்தார். மேலும் அவரது வங்கிக்கணக்கில் கூட சொல்லிக்கொள்ளும் அளவிற்கு வைப்புத்தொகை இல்லை. தனக்காக அனைத்தையும் செய்து கொள்ளும் அரசியல் வாதிகளுக்கு மத்தியில் இப்படி ஒரு அரசியல்வாதியாக, ஒரு தலைவன் கிடைப்பது என்பது மிக அரிதே.!

# மொழியோடு விளையாடு

**'கல்விக்கண் திறந்த காமராசர்' இத்தொடரிலுள்ள எழுத்துகளை மட்டும் பயன்படுத்திப் புதிய சொற்களை உருவாக்குங்கள். (எ.கா.) கண்**

கல்வி , கண், மண், திற, வில், கல், தில், கால், விண், விண்கல், காவி, காண், மதி, சதி, தந்தி, கதி, திறந்தகண்.

**முறை மாறியுள்ள சொற்களைச் சரியான இடத்தில் பொருத்திச் சொற்றொடரை நிறைவு செய்க.**

1. முளையிலே விளையும் தெரியும் பயிர்

**விளையும் பயிர் முளையிலேயே தெரியும்.**

2. ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை

**கல்லாமையை இல்லாமை ஆக்குவோம்.**

**கீழ்க்கானும் கட்டங்களில் உள்ள இன எழுத்துச் சொற்களை வட்டமிட்டுத் தனியாக எடுத்து எழுதுக.**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ண் | ட | ப | ம் | ஆ |
| ற | தி | க | ந் | கி | ச |
| கி | பி | ம் | து | ளி | ங் |
| தெ | ன் | ற | ல் | ங் | கு |
| ள் | வி | ம | ஞ் | ச | ள் |

- ❖ **மண்டபம்**
- ❖ **தென்றல்**
- ❖ **மஞ்சள்**
- ❖ **சங்கு**
- ❖ **பந்து**

## செயல் திட்டம்

காமராசர் குறித்த செய்திகள் மற்றும் புகைப்படங்களுடன் ஒரு படத்தொகுப்பு (Album) உருவாக்கவும்.

காமராசர் குறித்த செய்திகள் மற்றும் புகைப்படங்களுடன் ஒரு படத்தொகுப்பு (Album) உருவாக்கவும்.

| | |
|---|---|
| 1953 ஆம் ஆண்டு சக்ரவர்த்தி ராஜாஜி அவர்கள் கொண்டு வந்த குலக்கல்வித் திட்டத்தால் அதிக அளவில் எதிர்ப்புகள் கிளம்பியது. குலக்கல்வித் திட்டத்தால் காங்கிரசின் உள்ளேயே ராஜாஜிக்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியது. நிலைமையை அறிந்த மேலிடம் தமிழக அளவில் தீர்மானித்துக் கொள்ள அனுமதி வழங்கி விட்டது. ராஜாஜி தான் அவமானப்படுவதைத் தவிர்க்க 'தமிழக முதல்வர் பதவியிலிருந்து நானே விலகிக் கொள்கிறேன்' என்று அறிவித்தார். இதையடுத்து சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் காமாரசர் பெருவாரியான வாக்குகள் முன்னணியில் வெற்றி பெற்றார். காமராசர் தமிழக முதல்வராக 1953 தமிழ்ப்புத்தாண்டு அன்று பதிவியேற்றார். |  |
| குலக்கல்வித் திட்டத்தைக் கைவிட்டு. இவரது ஆட்சி காலத்தில் தமிழகத்தில் பள்ளிகள் எண்ணிக்கை 27,000 ஆனது. 1920 ஆம் ஆண்டு நீதிக்கட்சி ஆரதரவுடன் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். இந்த மதிய உணவுத் திட்டம் இன்று உலக அளவில் பாராட்டப்படும் திட்டமாகும். இதன் பலனாக பள்ளிகளில் படிப்போரின் எண்ணிக்கை 37 விழுக்காடாக உயர்ந்தது. |  |
| காமராசர் முதலமைச்சராகப் பதவி வகித்த காலங்களில் நாட்டு முன்னேற்றம், நாட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றம், கல்வி, தொழில் வளத்துக்கு முன்னுரிமையளித்து பல திட்டங்களை நிறைவேற்றினார். அவரது 10 முக்கிய நீர்பாசனத்திட்டங்கள் பவானி, மேட்டூர் கால்வாய், காவேரி டெல்டா, வடிகால் அபிவிருந்தி, மணிமுத்தாறு, அமராவதி, வைகை, பரம்பிக்களம் அழியாறு ஆகியவையாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் மலை கிராமங்களுக்குக் குடிநீர் பிரச்சனையைத் தீர்ப்பதற்காகக் காமராசரால் கட்டப்பட்ட மாத்தூர் தொட்டிப் பாலம் ஆசியாவின் மிகப்பெரிய தொட்டிப்பாலமாக இன்றளவும் உள்ளது. |  |
| 1975 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் மதிய உறக்கத்திற்குப் பின்னர் அவரின் உயிர் பிரிந்தது. அவர் இறந்தபோது பையில் இருந்த சிறிதளவு பணத்தைத் தவிர வேறு வங்கிக் கணக்கோ, சொந்த வீடோ, வேறு எந்த வித சொத்தோ இல்லை. தன் வாழ்நாள் இறுதி வரை வாடகை வீட்டிலேயே வசித்தார். |  |
| தமிழ்நாடு அரசு காமராசர் நினைவைப் போற்றும் வகையில் சென்னை கிண்டியில் நினைவிடம் ஒன்றை அமைத்துள்ளது. அங்கு காமராசரின் மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் காமராசர் மணிமண்டம் ஒன்றை அமைத்து அதில் காமராசரின் மார்பளவு சிலையும் நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. அவரின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படங்கள் பொதுமக்கள் பார்வைக்குக் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளது. |  |

## நிற்க அதற்குத் தக....

### என் பொறுப்புகள்...

1. கல்வியின் சிறப்பை உணர்ந்துள்ளேன்.
2. தொடர்ந்து கல்வி கற்பேன்.
3. கல்வியால் எனது குறிக்கோளை அடைவேன்.
4. கல்வியால் சிறந்தவர்களை என் முன்னோடிகளாகக் கொள்வேன்.
5. புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வேன்.

### கலைச்சொல் அறிவோம்

| | | |
|---|---|---|
| கல்வி | - | Education |
| தொடக்கப் பள்ளி | - | Primary School |
| மேல்நிலைப் பள்ளி | - | Higher Secondary School |
| நூலகம் | - | Library |
| மின்படிக்கட்டு | - | Escalator |
| மின்தூக்கி | - | Lift |
| மின்னஞ்சல் | - | E - Mail |
| குறுந்தகடு | - | Compact Disk (CD) |
| மின்நூலகம் | - | E - Library |
| மின்நூல் | - | E - Book |
| மின் இதழ்கள் | - | E - Magazine |

### இணையத்தில் காண்க

1. ஔவையார் என்ற பெயரில் பலர் இருந்திருக்கின்றனர் என்ற செய்தியை இணையத்தில் தேடுக.
2. கல்வியின் சிறப்புக் குறித்துக் கூறியுள்ள கல்வியாளர் சிலரின் பெயர்களை இணையத்தில் தேடிப் பட்டியலிடுக.
3. கல்வியால் உயர்ந்தோரின் பெயர்களை இணையத்தில் தேடிப் பட்டியலிடுக.
4. கல்வியின் சிறப்பினைக் கூறும் மேற்கோள்களை இணையத்தில் தேடிப் பயில்க.
5. உலகப் புகழ்பெற்ற புத்தகத் திருவிழாக்கள் குறித்து இணையத்தில் தேடி எழுதுக.

**********